## "தமிழ்நாடு தலைகுனியாது" தேர்தல் பரப்புரை!

# "All roads lead to Anna Arivalayam" - ஆங்கில நாளேடுகள் புகழாரம்!

**15 லட்சம் போடுவதாக சொல்லி ஏமாற்றினார் மோடி. சொல்லாமலே 5,000 ரூபாய் அள்ளிக் கொடுத்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின் - அனல் பறந்த பரப்புரை.**

கழகத்தின் சார்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் "தமிழ்நாடு தலைகுனியாது" தேர்தல் பரப்புரைக் கூட்டமானது நேற்று 9 சட்டமன்றத் தொகுதிகளில் சிறப்பாக நடைபெற்றது.

கடலூர் தொகுதியில் கம்பம் செல்வேந்திரன், திருவொற்றியூர் தொகுதியில் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், ஓசூர் தொகுதியில் கலாநிதி வீராசாமி, கெங்கவல்லி தொகுதியில் கோவி செழியன், பழனி தொகுதியில் திருமதி. கனிமொழி சோமு, திருவையாறு தொகுதியில் மருது அழகுராஜ்,

குளித்தலை தொகுதியில் ஏ.கே.எஸ். விஜயன், திருவாடானை தொகுதியில் திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன்,

பாளையங்கோட்டை தொகுதியில் எம்.எம்.அப்துல்லா ஆகியோர் கலந்து கொண்டு கழகத்திற்கு ஆதரவு திரட்டினர்.

கம்பம் செல்வேந்திரன் அவர்கள் பேசுகையில், "பெண்களுக்கு அளித்து வரும் மாதம் ரூ.1000 என்பது உதவி தொகை அல்ல அது மகளிரின் உரிமைத் தொகை என குறிப்பிட்டவர், ஒன்றிய பா.ஜ.க. அரசு பட்ஜெட் நிதி ஒதுக்கீட்டில் 'ஒரு கண்ணில் வெண்ணை மறு கண்ணில் சுண்ணாம்பு' தடவி நம்மை வஞ்சித்து வருகிறது என சாடினார்.

கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் அவர்கள் "ஆங்கிலப் பத்திரிகைகள் அனைத்தும்



"All roads lead to Anna Arivalayam" என்று எழுதுகின்றன என குறிப்பிட்டார்.

மேலும் "2022 - 2025 வரை 27,50,000 EPFO கணக்குகள் திறக்கப்பட்டுள்ளன. 27 லட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளதற்கு இதுவே சாட்சி" என எடுத்துரைத்தார். அதோடு அ.தி.மு.க. முழுமையாக பா.ஜ.க.வில் கரைந்து கொண்டு இருப்பதாகவும் விமர்சித்து பேசினார்.

குளித்தலையில் பேசிய ஏ.கே.எஸ். விஜயன் அவர்கள் "பல ஆண்டுகளுக்கு முன்பு நரேந்திர மோடி அவர்கள் ஒவ்வொருவரின் வங்கி கணக்கிலும் 15 லட்சம் ரூபாய் செலுத்துவோம் என்று கூறி மக்களை ஏமாற்றினார்.

ஆனால் எந்தவித அறிவிப்பும் இன்றி நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய பா.ஜ.க.வின் சதியை முறியடித்து ஒரே இரவில் 1.31 கோடி மக்களுக்கு 5,000 ரூபாயை அள்ளி வழங்கினார்" என்பதை குறிப்பிட்டவர், "அதிகார சக்திகளுக்கு எதிராக தைரியமாக குரல் கொடுத்து நிற்கும் ஒரே தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களே" என அழுத்தமாக பதிவு செய்தார்.

ஒவ்வொரு கூட்டத்திலும் நமது வளர்ச்சியை, நலத்திட்டங்களை தடுத்து வீழ்ச்சியில் தள்ள வரும் டெல்லி டப்பா எஞ்சினை விரட்டுவோம்.

தமிழ்நாட்டை என்றும் தலைகுனிய விடமாட்டோம் என உறுதி எடுக்கப்பட்டது.

பொதுமக்களின் ஏகோபித்த ஆதரவோடு வெற்றிப் பரப்புரையாக மாறி உள்ளது 'தமிழ்நாடு தலைகுனியாது' பரப்புரை.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி முகாம் அலுவலகத்தில், அப்பல்லோ மருத்துவமனையின் நிர்வாகி டாக்டர் விஜயகுமார் ரெட்டி சந்தித்து, வாழ்த்து தெரிவித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.3.2026) சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் சந்தீப் சக்சேனா அவர்களின் மகன் ப்ராஷ் – ஷாமா ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் அமைச்சர்கள் எ.வ.வேலு, முனைவர் டி.ஆர்.பி. ராஜா மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி முகாம் அலுவலகத்தில் நல்லி குப்புசாமி சந்தித்து, வாழ்த்து தெரிவித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.3.2026) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் கோட்டூர்புரம் திட்டப்பகுதியில் நடைபெற்ற விழாவில், கோட்டூர்புரம் திட்டப்பகுதியில் 307.24 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட 1800 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு குடியிருப்புக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., துணை மேயர் மு.மகேஷ் குமார் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் உள்ளனர்.

## மார்ச் 9– திருச்சியில் நடைபெறும் கழக மாநில மாநாட்டில்

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் இருந்து 15 ஆயிரம் கழகத்தினர் திரண்டு பங்கேற்பு!

### காஞ்சி வடக்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் முடிவு! மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!

**காஞ்சிபுரம்,மார்ச்.3-**

**மார்ச் 9- திருச்சியில் பிரம்மாண்டமாக நடைபெறும் கழக மாநில மாநாட்டில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் இருந்து 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கழகத்தினர் கார், வேன், பஸ்கள் மூலம் அணி அணியாக திரண்டு திருச்சியே திக்கு முக்காடும் வகையில் அலைகடலென திரண்டு வந்து பங்கேற்பது என்று காஞ்சி வடக்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் முடிவு என மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.**

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் தி.மு.கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் ஆலந்தூர் கத்திப்பாரா மேம்பாலம் அருகில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் கழக தீர்மானக் குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எல்.இதயவர்மன், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் க.அன்புச்செல்வன், ஜி.சி.அன்புச்செழியன், பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணாளன், த.ஜெயகுமார், எஸ்.இந்திரன், மாடம்பாக்கம் நடராஜன், ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னாட், செம்பாக்கம் சுரேஷ், ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி.கருணாநிதி, பையனூர் எம்.சேகர், ஏ.வந்தேமாதரம், திருமுடிவாக்கம் இ.மணி, கே.பி.ராஜன், நகரச் செயலாளர்கள் ஜெ.சண்முகம், எஸ்.ஜபருல்லா, எம்.கே.டி.கார்த்திக், த.வினோத்குமார், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ்,

தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மாறன், கழக சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் சாய் ஜெய



காந்த் பாரதி, தலைமைப் பொதுக் குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.கே. இப்பிராகிம், ஆர்.டி.பூபாலன், கே.எத்திராஜ், க.தேவேந்திரன், ஆர்.எஸ்.சங்கர், மா.கணேஷ்பாபு, இரா.பாஸ்கரன், மு.ரஞ்சன், ஜிஜேந்திரன் ராமு,

கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் தையூர் வீ.விஜயகுமார், டி.கே.கமலகண்ணன், கோ.ஜானகிராமன், எல்.பிரபு, எஸ்.ஆல்பர்ட், ஜா.செந்தில்தேவராஜ், ஆர்.கோவிந்தன், வி.ரவிச்சந்திரன், கே.ஆர்.ஆனந்தன், டி.எஸ்.எம்.ஜெயகரன், எஸ்.கர்ணன், டி.ஆர்.சாரதி பெரியநாயகம், பெப்சி கண்ணன், ஆர்.ஆர்.ஜெயராம்மார்த்தாண்டம், தங்கம் வாட்ஸ், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்தியபிரபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

**இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:-**

**இரங்கல் தீர்மானம்:-** கழக அமைப்பு செயலாளர் ஆஎ.எஸ். பாரதி அவர்களின் அண்ணன் சாய் சுந்தர், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழு முன்னாள் பெருந்தலைவர் கு.பாலகிருஷ்ணன் மகன் ஜெயச்சந்திரன், குன்றத்தூர் வடக்கு ஒன்றியம், பெரியபணிச்சேரி ஊராட்சி மன்றத் தலைவர் சத்தியமூர்த்தி அவர்களின் தாயார் பழனி அம்மாள், சின்னபணிச்சேரி பண்பரசன் தந்தை மூத்த முன்னோடி பலராமன், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் வ.வீரபாண்டியன், படப்பை ஊராட்சி விவேகானந்தர் நகர் முன்னாள் செயலாளர் முத்து, ஆலந்தூர் தெற்கு பகுதி துணை செயலாளர் சௌந்தரி, புனித தோமையர்மாலை வடக்கு ஒன்றிய செயலாளர் ஜி.கே.ரவி மாமனார் பச்சப்பிள்ளை, ஆலந்தூர் வடக்கு பகுதி 161-வது வட்ட துணை செயலாளர் சச்சீஸ்வரி கணவர் பாகமுவகர் மோகன், மறைமலைநகர் நகர முன்னாள் அவைத் தலைவர் சிம்சன் கண்ணன், காட்டாங்குளத்தூர் ஒன்றிய முன்னாள் பொருளாளர் கூடுவாஞ்சேரி அப்துல் சத்தார், கூடுவாஞ்சேரி 23-வது வார்டு அவைத் தலைவர் ஆர்.கே.எம்.மோகன்,

தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் அன்புக் கட்டளைக்கிணங்க, வருகிற 9.3.2026 அன்று மாலை பார்ப்போர் அனைவரும் வியக்கும் வகையில் திருச்சியில் மிகவும் பிரம்மாண்டமாக எழுச்சியுடன் நடைபெறவுள்ள "ஸ்டாலின் தொடரட்டும் ! தமிழ்நாடு வெல்லட்டும் !!" தி.மு.கழக மாநில மாநாட்டில்,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் இருந்து மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் - வார்டு கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக அணிகளின் மாவட்ட - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் உள்ளிட்ட ஒட்டு மொத்த கழகத்தினரும் பல்லாயிரக்கணக்கில் அலைகடலென அணி திரண்டு வந்து பங்கேற்பது என்றும்,

தீரர்கள் கோட்டமான திருச்சியில் நடைபெற உள்ள கழக மாநில மாநாடு திருப்புமுனை மாநாடாக அமைந்து நம்முடைய ஒப்பற்ற தலைவர் தளபதி தலைமையில் மீண்டும் திராவிட மாடல் நல்லாட்சி அமையப் போகிறது என்பதற்க்கு அச்சாரமாக அமைந்திடும் வகையில் அம்மாநாட்டிற்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் சிற்றூர்களில் இருந்து கழகத்தினர் பேருந்து - வேன் - கார்கள் மூலம் 15,000-க்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகளும். இயக்கத் தோழர்களும் பெருந்திரளாக அலைகடலென திரண்டு வந்து பங்கேற்று சிறப்பித்து புதிய வரலாற்று சாதனையை படைப்போம் என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஒருமனதாக தீர்மானிக்கிறது.

நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில், நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 28.ஆலந்தூர் - 29.திருப்பெரும்புதூர்- 30.பல்லாவரம் - 31.தாம்பரம்- 32. செங்கல்பட்டு - 33.திருப்போரூர் ஆகிய 6 சட்டமன்றத் தொகுதிகளில், கழகம் அறிவிக்கும் வேட்பாளர்களை அமோக வெற்றி பெறச்செய்து, நமது மாவட்டத்தில் மீண்டும் தி.மு.க. வெற்றிக் கொடி நாட்டிட,

தளபதி அவர்களை தமிழ்நாட்டின் முதல்வராக 2-வது முறையாக அரியணையில் அமர்த்திட, காஞ்சி வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் - வார்டு - கிளை - கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், BLA -2 - BLC -BDA - BYO - BLC இளைஞர் - BLC மகளிர் உள்ளிட்ட அனைவரும் பொறுப்புடனும் - ஒற்றுமையுடன் தேர்தல் களப்பணியாற்றி,

கழக வேட்பாளர்களுக்கு ஆதரவாக வீடு வீடாகச் சென்று தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு கழக வேட்பாளர்களின் வெற்றிக்காக கழகத்தினர் அனைவரும் இரவு - பகல் பாராமால் தேனீக்களை போல சுறுசுறுப்பாக பணியாற்றி - கண்துஞ்சாமல் அயராது உழைத்திடுவோம் என காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஏகமனதாக தீர்மானிக்கிறது.

சென்னை மண்டலத்தில் அடங்கிய 49 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள BLA-2, BLC, BDA உள்ளிட்ட 1,50,000 கழகத்தினர் அலைகடலென திரண்டு பங்கேற்ற "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" வாக்குச்சாவடி குழுவினருக்கான பயிற்சி மாநாடு நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள திருவிடந்தையில் மிகவும் பிரம்மாண்டமாக எழுச்சியுடன் நடைபெற்றதை கண்ட நம்முடைய திராவிட மாடல் முதல்வர் அன்புத் தலைவர் - தளபதி அவர்கள் மகிழ்ந்து பாராட்டியது நம்முடைய மாவட்டத்திற்கு கிடைத்த மிக பெரிய பேராகும்.

இம்மண்டல மாநாடு வெற்றிகரமாக அமைவதற்கு உறுதுணையாக அரும்பாடுபட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் வார்டு - கிளைச் செயலாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவருக்கும் மாவட்டக் கழகத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி முகாம் அலுவலகத்தில், சென்னை மயிலை பேராயர் ஜார்ஜ் அந்தோணிசாமி சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். உடன் சாந்தோம் பேராலய அதிபர் வின்சென்ட் சின்னதுரை மற்றும் ஸ்டேனி ஆகியோர் உள்ளனர்.





காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் வாலாஜாபாத் வடக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் ஒன்றிய செயலாளர் படுநெல்லி பி.எம்.பாபு ஏற்பாட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு க.செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., ஆகியோர் தலைமையில் பிரமாண்டமான கேக் வெட்டி சுமார் 500 பேருக்கு அறுசுவை விருந்து வழங்குதல் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் ஒன்றிய குழு தலைவர் ஆர்.கே.தேவேந்திரன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் எஸ்.ராஜலட்சுமி குஜராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.